**ஆயுர்வேத வைத்திய சபையின் 2010**

**1. நிதிக்கூற்றுக்கள்**

-------------------

**1.1. அபிப்பிராயம்**

---------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, ஆயுர்வேத வைத்திய சபையில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர ஆயுர்வேத வைத்திய சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

----------------------------------------------------------

**1.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 114,019 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 7,146 தொகையான கணனி வலையமைப்பிற்கான செலவினம் கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது.

(இ) ரூபா 64,674 தொகையான முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் வேறாகக் காண்பிக்கப்படாது ஒதுக்கக் கணக்கிற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பகுதியின் 2(1) ஆம் பிரிவு | பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 3 அங்கத்தவர்கள் சபையின் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிதிப் பிரமாணம் நி.பி.756(1) மற்றும் நி.பி. 757(2)(ஆ) | மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் பொருட் கணிப்பிற்காக பொருட் கணிப்புச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>2009 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பின் போது பற்றாக்குறைகள் மற்றும் இழப்புக்களாக இனங்காணப்பட்ட பல்வேறு பொருட்களின் 38 அலகுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது சபை நடவடிக்கைகளின் செயற்பாட்டு விளைவு ரூபா 982,615 தொகையான மிகையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,315,473 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டமையால் ஆண்டிற்கான நிதிசார் விளைவில் ரூபா 2,298,088 தொகையான முன்னேற்றம் காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஏற்பாட்டின் அதிகரிப்பு இம் முன்னேற்றத்திற்கான காரணமாக இருந்தது.

**2.2 செயலாற்றல்**

**--------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஆயுர்வேத வைத்திய சபையில் 475 வைத்தியர்கள் வீதம் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட மொத்த வைத்தியர்களின் எண்ணிக்கை 20,004 ஆகும்.

(ஆ) ஆயுர்வேத மருத்துவ சபையின் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக துணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் ஒதுக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது ஒப்படைக்கப்பட்ட பெரும்பாலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

உதாரணம் :-

(i) பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்களுக்காக கைநூல் தயாரித்தல்

(ii) உள்நாட்டு முறிவு வைத்தியம் தொடர்பான தொழிற்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

(iii) உள்நாட்டு பாரம்பரிய வைத்தியர்கள் பதிவு செய்தல் பாடவிதானத்தினைத் திருத்துதல்.

(இ) 2010 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட சில முக்கிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் செயற்பாட்டுத் திட்டம் ஆக்கபூர்வமான செயற்பாட்டு உபகரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிராரமை அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக

(i). ஆயுர்வேத வைத்திய சபையின் சட்டவரையறையை உறுதிப்படுத்தி ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தினால் சட்ட ரீதியான கட்டளைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ii) தொழில் சார் அதிகாரப் பொறுப்பு வழங்கும் செயற்பாட்டை மேம்படுத்தல்

(iii) ஆயுர்வேத தொழில்சார்ந்தவர்களின் ஒழுங்குமுறைகளை முறையாக பேணுவதற்கு அவசியமான ஒழுங்கு விதிகளையும் நியமங்களையும் செயற்படுத்தல்.

**2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) பணிக்கொடைக்காக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் ஒதுக்கங்கள் தேசிய சேமிப்பு வங்கியில் சாதாரண சேமிப்புக் கணக்கொன்றில் பேணப்படுவதுடன் உரிய அங்கீகாரங்கள் பெறப்பட்டு நிலையான வைப்பில் இடப்பட்டிருப்பின் கூடிய முதலீட்டு வட்டியை உழைத்திருக்க முடிந்திருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் முதலீட்டு மீதி ரூபா 1,034,608 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபையின் மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்தமையால் அரசாங்கத்தின் ஏற்பாடாக கிடைக்கப்பெற்ற தொகையில் ரூபா 1,900,595 தொகை நடைமுறைக் கணக்கில் எஞ்சியிருந்தது.

**2.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வொன்று செயற்பட்டிருக்கவில்லை.

**3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவுசெய்தல்.
(ஆ) மருத்துவச் சான்றிதழ் புத்தகங்கள் வழங்கல்
(இ) விசாரணை